செ.வெ.எண்:234 நாள்:10.04.2018

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிக்களுக்கான பேருந்து பயன்பாடு குறித்து நடத்துனர் மற்றும் ஒட்டுநர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

-----

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திருநெல்வேலி மண்டலம் மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் இணைந்து மாற்றுத்திறனாளிக்களுக்கான பேருந்து பயன்பாடு குறித்து நடத்துனர் மற்றும் ஒட்டுநர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (10.04.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் சுமார் 53 ஆயிரம் மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். இதில் அதிகமானவர்கள் ஏழை எளிய மக்கள் இவர்கள் அதிகளவில் அரசு பேருந்து போக்குவரத்தையே பயன்படுத்தி வருகின்றனர். மாற்றுத்திறனாளிகளுக்கென குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடத்தப்பட்டு வருகிறது. இதில் மாற்றுத்திறனாளிகள் பேருந்து போக்குவரத்தின் போது பல்வேறு இன்னல்களை சந்திப்பதாக தெரிவித்தனர். பல்வேறு காரணங்களால் பேருந்துகள் பேருந்து நிறுத்தத்தின் அருகில் நிறுத்தமால் சிறிது தூரத்தில் நிறுத்த நேரிடும் போது மாற்றுத்திறனாளிகள் பேருந்தில் வேகமாக வந்து ஏற சிரமப்படும் நிலை உள்ளது. மாற்றுத்திறனாளிகள் மற்றும் மிக வயதானவர்கள் பேருந்து நிறுத்தத்தில் உள்ள இருக்கையில் தான் அமர்ந்து இருப்பார்கள். பேருந்து நிறுத்தத்தின் மிக அருகில் பேருந்துகளை நிறுத்துவதால் அவர்கள் ஏறி, இறங்க ஏதுவாக இருக்கும். மாற்றுத்திறனாளிகளிடம் அன்பாக பேசி உதவுவதால் அவர்களுக்கும் ஒட்டுநர், நடத்துனர்களின் மீது நமக்காக உதவுகிறார்கள் என்ற மரியாதையும், மகிழ்ச்சியும் ஏற்படும். உங்களுக்கு பணியின் போது களைப்புகள் இருந்தாலும் இது போன்ற உதவிகளை செய்யும் போது மன நிறைவு ஏற்படும். திருநெல்வேலி மாவட்டத்தில் அரசு போக்குவரத்து ஒட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்கு முதல் முறையாக இக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. இங்கு கூறப்படும் நெறிமுறைகளை நீங்கள் பின்பற்றுவதுடன் உங்களது சக பணியாளர்களுக்கும் எடுத்துக் கூறி மாற்றுத்திறனாளிகள், வயதானவர்கள் பேருந்துகளில் சிரமமின்றி பயணம் செய்ய உதவிட வேண்டும். இது போன்ற கூட்டங்கள் பல்வேறு கட்டங்களாக தொடர்ந்து நடத்தப்படும். தனியார் பேருந்து ஒட்டுநர், நடத்துனர்களுக்கும் கூட்டங்கள் நடத்தப்படும் என பேசினார்.

இக்கூட்டத்தில் அரசு போக்குவரத்துக் கழகம் திருநெல்வேலி மண்டல பொது மேலாளர் திரு.பி.எஸ்.ஜி.குமார், உதவி மேலாளர் (வணிகம்) திரு.எம்.சுப்பிரமணியன், உதவி இயக்குநர் மற்றும் அரசு போக்குவரத்து கழக மக்கள் தொடர்பு அலுவலர் திரு.அண்ணா, மாற்றுத்திறனாளி நல அலுவலர் திருமதி.சாந்தி குளோரி எமரால்ட், மற்றும் அலுவலர்கள், திருநெல்வேலி மண்டல அரசு போக்குவரத்துக் கழக ஒட்டுநர்கள் மற்றும் நடத்துனர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.